திருமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. K.மதியழகன்.,

க.எண்: 7 /2024 நாள்: 22 .04.2024

பொருள்: மனைப்பிரிவு, கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம், திருமங்கலம் ஊராட்சி (ம) கிராமம், ச.எண்கள்: 35/1C, 35/2B1, 35/3C1, 35/4B2, 35/5, 35/6 ஆகியவற்றில் 1.149 ஏக்கர் (அ) 4651.00 ச.மீ பரப்பளவு கொண்ட மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் – சார்பு.

படிக்க:

1) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் [UD(3)] துறை நாள்:23.09.2020
2) நகர் ஊரமைப்பு இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் ந.க.எண். 22350/2024/ TCP/(IUTT0O2M) / நாள்:01.04.2024.
3) திருமங்கலம் ஊராட்சி தீர்மான எண்: 07, நாள்: 22.04.2024.
4) தானபத்திரம் எண்: 630/2024, நாள்: 26.03.2024.
5) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா - விழுப்புரம் கருவூலம் செலுத்துச் சீட்டு நாள்: 08.04.2024 (ம) இந்தியன் பாங்க் – திருக்கனூர் கிளை செலுத்துச் சீட்டு நாள்: 20.04.2024.

———

உத்தரவு:

கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம், திருமங்கலம் ஊராட்சி (ம) கிராமம், ச.எண்கள்: 35/1C, 35/2B1, 35/3C1, 35/4B2, 35/5, 35/6 ஆகியவற்றில் 1.149 ஏக்கர் (அ) 4651.00 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தினை மனைப்பிரிவுகளாக வரன்முறைப்படுத்திட, பார்வை (1) –ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (2) –ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக ஒப்புதல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

பார்வை (3) –ல் (ம) (4) –ல் காணும் ஊராட்சியின் தீர்மான மற்றும் தானபத்திரம் அமைந்துள்ள இடத்தினை ஸ்தல ஆய்வு செய்து மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்த அனுமதி வழங்குமாறு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார் .

பார்வை (5)–ல் காணும் விவரப்படி புன்செய் வகைப்பாட்டில் இருந்த மனையாக மாற்ற அனுமதி கோரும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகை நில பயன்மாற்ற கட்டணமாக உரிய அரசு தலைப்பில் செலுத்தி அதற்குண்டான கட்டணம் ரூ.15,000/– மற்றும் கூராய்வு கட்டணம் ரூ.27,000/– (27*1000) இந்தியன் பாங்க் – திருக்கனூர் கிளை வாயிலாக செலுத்தி அதற்குண்டான ஆவணங்கள் பின்வரும் விவரப்படி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசுத்தலைப்பு – 021760800AS22709

வ எண்.	விஸ்தீரணம்	சார்பதிவாளர் சந்தை மொத்த மதிப்பு ரூ (ச.மீ)	3% நில மாற்று கட்டணம் ரூபாய்
1	1.149 ஏக்கர் (அ) 4651.00 ச.மீ 35/1C, 35/2B1, 35/3C1, 35/4B2, 35/5, 35/6 - 3366.90 ச.மீ	148.30	15,000.00

ரூ.15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)

நிபந்தனைகள்:

1) "நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்" என இதன் மூலம் தெரிவிக்கப்பகிறது.

2) மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அனுமதி பெறவேண்டும். மேலும் நீர்நிலைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்கள் என தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்புமின்றி அனுதி ரத்து செய்யப்படும்.

3) மேற்படி மனைப்பிரிவிற்கு ஊரக வளர்ச்சித்துறையால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உரிய துறையினால் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும்.

4) மேற்படி புதியமனைப்பிரிவில் தார் சாலை, பூங்கா, உள்ளாட்சி –A (ம) மின்சார துறை –B ஆகியன தானமாக கண்டமங்கலம் சார்பதிவாளர் ஆவண எண். 630/2024, நாள்: 26.03.2024 –ன் படி ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

5) மேற்படி புதியமனைப்பிரிவில் தார் சாலை, தெருக்களின் பெயர் பலகைகள், மனையின் உயர்மின்னழுத்த கம்பிகள் செல்லுமாயின் அதனை மேற்படி மனை உரிமையாளர் தனது சொந்த செலவில் செய்துகொள்ளவேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, திருமங்கலம் ஊராட்சி (ம) கிராமம், ச.எண்கள்: 35/1C, 35/2B1, 35/3C1, 35/4B2, 35/5, 35/6 ஆகியவற்றில் 1.149 ஏக்கர் (அ) 4651.00 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள 27 மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

22/4/2024

தலைவர்
திருமங்கலம் ஊராட்சி

தலைவர்
திருமங்கலம் ஊராட்சி,
கண்டமங்கலம் ஒன்றியம்

பெறுநர்

திரு.J. லோகபிராமன்,
நெ.157/A, 42/A பெரிய சாலை,
பொன்னியம்மன்மேடு, திருவள்ளூர் வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம் – 600 110.

நகல்: **வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்)** கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்குத் தகவலுக்காகப், பணிந்தனுப்பப்படுகிறது

நகல்: **உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்பு)** விழுப்புரம் அவர்களுக்குத் தகவலுக்காகப், பணிந்தனுப்பப்படுகிறது

நகல்: **சார்பதிவாளர்** கண்டமங்கலம்

நகல்: **வட்டாட்சியர்,** விக்கிரவாண்டி